**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

மனு எண். எம்.சி.ஓ.பி. 29/2018

PW - 2

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | மகேந்திரன் |
| த.பெ. | சுப்பிரமணியம் |
| வயது | 55 |
| முகவரி | பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | |
|---|---|
| மசாஆ - 14 | எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது) |
| மசாஆ - 15 | உறுப்பினர் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது) **(எதிர்தரப்பினரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)** |

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என கேட்டால் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என கேட்டால் ஆட்டோ கன்சல்டிங் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை வழக்கறிஞர் கூறிதான் சொல்லியுள்ளேன் என கேட்டால் அது சரியல்ல. நான் மனுதாரர் அழைத்ததிற்கிணங்க நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் ஆட்டோ கன்சல்டிங் தொழில் செய்வதை பொறுத்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அடையாள அட்டை மட்டும் தாக்கல் செய்துள்ளேன், வேறு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் ஆட்டோ கன்சல்டிங் மூலமாக பதிவு சான்றோ அல்லது வாங்கி அல்லது விற்ற வாகனங்களின் தகவல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அடிபட்ட வாகனத்தில் எந்த பாகம் சேதமடைந்தது என கேட்டால் வண்டி முழுவதுமாக சேதமடைந்து காணப்பட்டது. சேதத்தை பொறுத்து சர்வேயர் தான் கூற முடியும் என்றும், நான் கூற முடியாது என்று சொன்னால் சரிதான். ஆனால் நான் சேதமடைந்த வாகனத்தை பார்த்த வகையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் சேதம் ஏற்பட்ட வாகனத்தை பார்க்கவே இல்லை என்றும், மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சேதமடைந்த வாகனம் எந்த தேதியில் வாங்கப்பட்டது அதன் பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சேதம் அடைந்த வாகனம் எத்தனை கிலோமீட்டர் ஓடியிருந்தது என கேட்டால் அது முழுவதுமாக சேதம்

அடைந்ததால் தெரியாது. சேதம் அடைந்த வாகனத்திற்கு மனுதாரர் எத்தனையாவது உரிமையாளர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்திற்கு சேதம் மதிப்பு சுமார் ரூ.2 1/2 லட்சம் இருக்கும் என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. வாகனத்தின் உண்மையான மதிப்பே 50 ஆயிரம் இருக்கும் என்றும் நான் சேதம் மதிப்பு ரூ.2 1/2 லட்சம் இருக்கும் என பொய் சொல்கிறென் என்றால் சரியல்ல வாகனத்தின் சேத மதிப்பை சர்வேயர் தான் சொல்ல முடியும் என்றும், நான் சொல்ல முடியாது ஏன்றால் சரியல்ல. வாகனத்தின் சேத மதிப்பை அறிந்து சாட்சியம் அளிக்க நான் தகுதியான நபர் அல்ல என்றால் சரியல்ல. நான் சொன்ன விவரங்கள் அனைத்தும் மனுதாரர் சொல்லி நான் கூறுகிறேன் என்றும், என்னுடைய சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி